सुग्रीवमुख्यान्	ஸுக்ரீவனை முதன்மையாகக்கொண்ட
हरीन्	வானரர்களை
स्नानेन	ஸ்நானத்தால்
अभिनिमन्त्रय	உபசரிப்பாயாக.

स तु ताम्यति धर्मात्मा मम हेतोः सुखोचितः । सुकुमारो महाबाहुः कुमारः सत्यसंश्रवः ॥

तु	"இப்பொழுது
सः	அந்த
धर्मात्मा	தர்மாத்மாவும்
महाबाहुः	மகாபாகுவும்
सुकुमारः	கட்டழகனும்
सुखोचितः	ஸுகத்திற்கே உரியவனும்
सत्यसंश्रवः	ஸத்யத்தையே எதற்கும் மேம்பட்டதாய்க் கொண்டவனுமான
कुमारः	குழந்தை பரதன்
मम हेतोः	என்காரணமாய்
ताम्यति	தவித்துக்கொண்டிருக்கிறான்.

तं विना कैकयीपुत्रं भरतं धर्मचारिणम् । न मे स्नानं बहुमतं वस्त्राण्याभरणानि च ॥६॥

तं	"அந்த	स्नानं	ஸ்நானமும்
कैकयीपुत्रं	கைகேயீ தேவியாரின் புதல்வனும்	बहुमतं न	விருப்பமில்லை;
धर्मचारिणं	தர்மிஷ்டனுமான	वस्त्राणि	வஸ்திரங்களும்
भरतं विना	பரதனை விடுத்து	आभरणानि	ஆபரணங்களும்
मे	எனக்கு	च	அப்படியே விருப்பமில்லை.

इत एव पथा क्षिप्रं प्रतिगच्छामि तां पुरीम् । अयोध्यामागतो ह्येष पन्थाः परमदुर्गमः ॥

इतः	"இந்த	अयोध्यां	அயோத்திக்கு
पथा एव	மார்க்கமாகவே	आगतः	செல்லும்
तां पुरीं	அந்த நகருக்கு (அயோத்திக்கு)	एषः	இந்த
क्षिप्रं	விரைவாய்	पन्थाः हि	மார்க்கமோ
प्रतिगच्छामि	நான் திரும்பிச் செல்கின்றேன்;	परमदुर्गमः	செல்லக் கஷ்டமானது."

एवमुक्तस्तु काकुत्स्थं प्रत्युवाच विभीषणः । अह्ना त्वां प्रापयिष्यामि तां पुरीं पार्थिवात्मज ॥

तु	அப்பொழுது	पार्थिवात्मज	"சக்ரவர்த்தி திருமகனே!
एवं	மேற்கண்டவாறு	त्वां	தேவரீரை
उक्तः	மொழிந்தருளப்பட்ட	तां	அந்த
विभीषणः	விபீஷணர்	पुरीं	பட்டணத்திற்கு
काकुत्स्थं	ஸ்ரீராமரைப்பார்த்து	अह्ना	ஒரு பகலிலேயே
प्रत्युवाच	விண்ணப்பித்துக் கொண்டார்;	प्रापयिष्यामि	எழுந்தருளச்செய்கின்றேன்.

पुष्पकं नाम भद्रं ते विमानं सूर्यसन्निभम् । मम भ्रातुः कुबेरस्य रावणेनाहृतं बलात् ॥

भद्रं ते	"தேவரீர் கிருபை பெருகட்டும்;	पुष्पकं नाम	புஷ்பகமென்ற
मम	எனது	विमानं	விமானமானது
भ्रातुः	தமயனாகிய	रावणेन	ராவணரால்
कुबेरस्य	குபேரரது	बलात्	பலாத்காரமாய்
सूर्यसन्निभं	ஸூர்யனை நிகர்த்த	आहृतम्	கொண்டுவரப்பட்டது.

हृतं निर्जित्य संग्रामे कामगं दिव्यमुत्तमम् । त्वदर्थे पालितं चैतत्तिष्ठत्यतुलविक्रम ॥१०॥

अतुलविक्रम	"ஒப்பற்ற பிரதாபம் கொண்டவரே!	उत्तमं	சிறந்ததும்
संग्रामे निर्जित्य	போரில் வென்று	दिव्यं	தெய்வத்தன்மையுற்றதுமான
हृतं	கொண்டுவரப்பட்டதும்	एतत्	இது (விமானம்)
		त्वदर्थे च	தேவரீருக்காகவே
कामगं	நினைத்தபடி செல்லவல்லதும்	पालितं	ரக்ஷிக்கப்பட்டு
		तिष्ठति	காத்திருக்கிறது.

तदिदं मेघसङ्काशं विमानमिह तिष्ठति । तेन यास्यसि यानेन त्वमयोध्यां गतज्वरः ॥

तत्	"அந்த
इदं	இந்த
मेघसङ्काशं	மேகத்தையொத்த
विमानं	விமானம்
इह	இங்கு
तिष्ठति	காத்துநிற்கின்றது;
त्वं	தேவரீர்
तेन	அந்த
यानेन	விமானத்தால்
अयोध्यां	அயோத்திக்கு
गतज्वरः	நிச்சிந்தையராக
यास्यसि	எழுந்தருள்வீராக.

अहं ते यद्यनुग्राह्यो यदि स्मरसि मे गुणान् । वस तावदिह प्राज्ञ यद्यस्ति मयि सौहृदम् ॥

प्राज्ञ	"பேரறிவாளரே!
अहं	அடியேன்
ते	தேவரீரால்
अनुग्राह्यः यदि	அனுக்ரஹிக்கப்பாத்திரனாகில்
मे	அடியேனது
गुणान्	குணங்களை
स्मरसि यदि	திருவுளத்தில் கொள்வீராகில்,
मयि	அடியேனிடம்
सौहृदं	அன்பானது
अस्ति यदि	இருக்குமாகில்,
इह	இங்கு
तावत्	இப்பொழுது
वस	வஸித்தருள்வீராக.

लक्ष्मणेन सह भ्रात्रा वैदेह्या चापि भार्यया । अर्चितः सर्वकामैस्त्वं ततो राम गमिष्यसि ॥

राम	"ஸ்ரீராம!
त्वं	தேவரீர்
भ्राता	தம்பியாகிய
लक्ष्मणेन	லக்ஷ்மணரோடு
सह	கூடவும்
भार्यया	தர்மபத்னியான
वैदेह्या अपि च	ஜானகீதேவியோடும்,
सर्वकामैः	ஸர்வபோகங்களாலும்
अर्चितः	பூஜிக்கப்பட்டவராய்
ततः	அதன்பின்னர்
गमिष्यसि	எழுந்தருள்வீராக.

प्रीतियुक्तस्य मे राम ससैन्यः ससुहृद्गणः । सत्क्रियां विहितां तावद्गृहाण त्वं मयोद्यताम् ॥

राम	"ஸ்ரீராம!
त्वं	தேவரீர்
ससैन्यः	ஸைன்யங்களோடு கூடவும்
ससुहृद्गणः	நண்பர்களோடு கூடவும்
प्रीतियुक्तस्य	வழுவாப்பற்றுகொண்ட
मे	என்னிடம்
तावत्	இப்பொழுது
मया	அடியேனால்
विहितां	செய்யப்பட்டு
उद्यतां	ஸித்தமாயிருக்கும்
सत्क्रियां	உபசரணையை
गृहाण	ஏற்றுக்கொண்டருள்வீராக!

प्रणयाद्बहुमानाच्च सौहृदेन च राघव । प्रसादयामि प्रेष्योऽहं न खल्वाज्ञापयामि ते ॥

राघव	"ஸ்ரீராம!
प्रेष्यः	தாஸனான
अहं	நான்
प्रणयात्	அபிமானத்தாலும்,
बहुमानात् च	கௌரவத்தாலும்,
सौहृदेन च	நட்பினாலும்,
प्रसादयामि	வேண்டிக்கொள்கின்றேன்;
ते	தேவரீருக்கு
आज्ञापयामि न	எடுத்துரைக்கவில்லை;
खलु	இது ஸத்யம்."

एवमुक्तस्ततो रामः प्रत्युवाच विभीषणम् । रक्षसां वानराणां च सर्वेषां चोपशृण्वताम् ॥

एवं	இங்ஙனம்	सर्वेषां च	யாவரும்
उक्तः	விஜ்ஞாபிக்கப்பட்ட	उपशृण्वतां	கேட்கையில்
रामः	ஸ்ரீராமர்	विभीषणं	விபீஷணரைப் பார்த்து
ततः	அப்பொழுது	प्रत्युवाच	மறுமொழி புகன்றருளி னார்:
रक्षसां	அரக்கர்களும்		
वानराणां च	வானரர்களும்		

पूजितोऽहं त्वया सौम्य साचिव्येन परन्तप । सर्वात्मना च चेष्टाभिः सौहृदेनोत्तमेन च ॥

सौम्य	"புண்யசீலனே!	चेष्टाभिः च	செயல்களாலும்
परन्तप	சத்ருஸம்ஹாரக!	उत्तमेन	சிறந்த
अहं	நான்	सौहृदेन च	நட்பினாலும்
त्वया	உன்னால்	सर्वात्मना पूजितः	முற்றும் கௌரவிக்கப் பட்டேன்.
साचिव्येन	மந்திராலோசனையாலும்		

न खल्वेतन्न कुर्यां ते वचनं राक्षसेश्वर । तं तु मे भ्रातरं द्रष्टुं भरतं त्वरते मनः ॥१८॥
मां निवर्तयितुं योऽसौ चित्रकूटमुपागतः । शिरसा याचतो यस्य वचनं न कृतं मया ॥
कौसल्यां च सुमित्रां च कैकेयीं च यशस्विनीम् । गुरूंश्च सुहृदश्चैव पौरांश्च तनयैः सह ॥

राक्षसेश्वर	"ராக்ஷஸமன்ன	कृतं न	கொள்ளப் படவில்லையோ
ते	உனது	तं भ्रातरं	அந்த தம்பியாகிய
एतत्	இந்த	भरतं	பரதனையும்
वचनं	விண்ணப்பத்தை	कौसल्यां च	கோசலாதேவியாரையும்
कुर्यां न	கொள்ளமாட்டேனென்பது	सुमित्रां च	ஸுமித்திராதேவியாரையும்
न खलु	இல்லவே இல்லை;	यशस्विनीं	கீர்த்திமதியான
तु	ஆயினும்	कैकेयीं	கைகேயீதேவியாரையும்
यः	எந்த	गुरून् च	ஆசார்யர்களையும்
असौ	இவன்	सुहृदः एव च	நண்பர்களையும்
मां	என்னை	तनयैः सह	புத்திரர்களுடன் கூடிய
निवर्तयितुं	திரும்ப அழைத்துச் செல்வதற்கு	पौरान् च	பட்டணத்து ஜனங்களையும்
चित्रकूटं	சித்திரகூடத்திற்கு	द्रष्टुं	காண
उपागतः	வந்தானோ	मे	எனது
शिरसा	முடிதாழ்த்தி	मनः	மனமானது
याचतः	வேண்டிக்கொள்ளும்	त्वरते	துடிக்கின்றது.
यस्य	எவனது		
वचनं	விண்ணப்பமானது		
मया	என்னால்		

उपस्थापय मे क्षिप्रं विमानं राक्षसेश्वर। कृतकार्यस्य मे वासः कथंस्विदिह संमतः ॥

राक्षसेश्वर	"ராக்ஷஸமன்ன!	कृतकार्यस्य	மேற்கொண்டகாரிய த்தை முடித்துவிட்ட
विमानं	விமானத்தை	मे इह	எனக்கு இவ்விடத்தில்
क्षिप्रं	விரைவாய்	वासः	வாஸமானது
मे	எனக்கு	कथंस्वित्	எப்படித்தான்
उपस्थापय	அருகில் கொணர்ந்து நிறுத்துவாயாக;	संमतः	ஸம்மதமாகும்?

अनुजानीहि मां सौम्य पूजितोऽस्मि विभीषण। मन्युर्न खलु कर्तव्यस्त्वरितं त्वाऽनुमानये॥

सौम्य	"புண்யாத்மாவே!	मन्युः खलु	கோபமே
विभीषण	விபீஷண!	कर्तव्यः न	கொள்ளத்தக்கதன்று;
पूजितः अस्मि	பூஜிக்கப்பட்டு விட்டேன்;	त्वा	உன்னிடம்
मां	எனக்கு	त्वरितं	விரைவாக
अनुजानीहि	விடைகொடுப்பாயாக;	अनुमानये	விடை கேட்கின்றேன்."

राघवस्य वचः श्रुत्वा राक्षसेन्द्रो विभीषणः। तं विमानं समादाय तूर्णं प्रतिनिवर्तत ॥
ततः काञ्चनचित्राङ्गं वैडूर्यमयवेदिकम्। कूटागारैः परिक्षिप्तं सर्वतो रजतप्रभम् ॥ २४ ॥
पाण्डुराभिः पताकाभिर्ध्वजैश्च समलंकृतम्। शोभितं काञ्चनैर्हर्म्यैर्हेमपद्मविभूषितम् ॥२५॥
प्रकीर्णं किङ्किणीजालैर्मुक्तामणिगवाक्षितम्। घण्टाजालैः परिक्षिप्तं सर्वतो मधुरस्वनम् ॥
यन्मेरुशिखराकारं निर्मितं विश्वकर्मणा। बहुभिर्भूषितं हर्म्यैर्मुक्तारजतसन्निभैः ॥ २७ ॥
तलैः स्फाटिकचित्राङ्गैर्वैडूर्यैश्च वरासनैः। महार्हास्तरणोपेतैरुपपन्नं महाधनैः ॥ २८ ॥

राक्षसेन्द्रः	"ராக்ஷஸமன்னரான	रजतप्रभं	வெள்ளி ஒளிகொண்ட
विभीषणः	விபீஷணர்	पाण्डुराभिः पताकाभिः	வெண்நிசான்களாலும்
राघवस्य	ஸ்ரீராமரது	ध्वजैः च	கொடிகளாலும்
वचः	திருமொழிக்கு	समलंकृतं	அலங்கரிக்கப்பட்டதும்
श्रुत्वा	செவிசாற்றி		
ततः	அப்பொழுது	काञ्चनैः	ஸ்வர்ணமயமான
काञ्चनचित्राङ्गं	பொன்னாலிழைக்கப் பட்ட உருக்கொண்டதும்	हर्म्यैः	உப்பரிக்கைகளால்
		शोभितं	அழகுற்று விளங்குவதும்
वैडूर्यमयवेदिकं	வைடூர்யமயமான மேடைகளுற்றதும்	हेमपद्म-विभूषितं	பொன் தாமரை மலர்களால் அலங்கரிக்கப் பட்டதும்
कूटागारैः	மண்டபங்களால்		
परिक्षिप्तं	நிறைந்ததும்	किङ्किणीजालैः	சதங்கைச்சரங்களால்
सर्वतः	எங்கும்	प्रकीर्णं	நிறைந்ததும்

मुक्तामणि- गवाक्षितं	முத்துக்களாலும் ரத்னங்களாலும் இழைத்த ஜன்னல் களுற்றதும்	हर्म्यैः	மேன்மாடங்களால்
घण्टाजालैः	மணிவரிசைகளால்	भूषितं	அழகாய்விளங்குவதும்
परिक्षिप्तं	நிறைந்து	स्फाटिकविग्रहैः	படிகக்கற்களமைந்த
सर्वतः	எங்கும்	तलैः	தரைகளோடும்
मधुरस्वनं	இனியவோசை கொண்டதும்	महार्हास्तरणोपेतैः	சிறந்த விரிப்புகள் விரிக்கப்பட்டவைகளும்
विश्वकर्मणा	விச்வகர்மாவால்	महाधनैः	விலையுயர்ந்தவைகளும்
मेरुशिखराकारं	மேருபர்வதசிகரத்திற் கொப்பாய்	वैडूर्यैः च	வைடூர்யமிழைக்கப் பெற்றவைகளுமான
निर्मितं यत्	செய்யப்பட்டதும்	वरासनैः	சிறந்த ஆஸனங்களோடு
मुक्तारजतसन्निभैः	முத்துக்களுக்கும் வெள்ளிக்கும்ஒப்பான	उपपन्नं	கூடியதுமாகிய
बहुभिः	பல	तं विमानं	அந்த விமானத்தை
		समादाय	செலுத்திக்கொண்டு
		तूर्णं	விரைவாய்
		प्रतिनिववृते	திரும்பிவந்தார்.

उपस्थितमनाधृष्यं तद्विमानं मनोजवम् । निवेदयित्वा रामाय तस्थौ तत्र विभीषणः ॥

तत्र	அப்பொழுது	तत्	அந்த
विभीषणः	விபீஷணர்	विमानं	விமானத்தை
रामाय	ஸ்ரீராமரிடம்	उपस्थितं	வந்திருப்பதாய்
अनाधृष्यं	ஒப்பற்றதும்	निवेदयित्वा	தெரிவித்து
मनोजवं	மனோவேகங்கொண்டதுமான	तस्थौ	காத்துநின்றார்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे चतुर्विंशत्युत्तरशततमः सर्गः ॥

आदितः श्लोकाः 20329 युद्धकाण्डे आदितः श्लोकाः 5654

पञ्चविंशत्युत्तरशततमः सर्गः — நூற்றிருபத்தைந்தாவது ஸர்க்கம் ॥१२५॥

वानरसेनासंमाननम् — வானரஸேனைகளை வெகுமதித்தல்

उपस्थितं तु तं दृष्ट्वा पुष्पकं पुष्पभूषितम् । अविदूरस्थितो रामं प्रत्युवाच विभीषणः ॥

अविदूरस्थितः	அருகில் நிற்கும்	तं पुष्पकं	அந்தபுஷ்பகவிமானத்தை
विभीषणः	விபீஷணர்	उपस्थितं	வந்துவிட்டதாய்
रामं दृष्ट्वा	ஸ்ரீராமரைப்பார்த்து	तु	அப்பொழுது
पुष्पभूषितं	புஷ்பங்களாலலங்கரிக்கப்பட்ட	प्रत्युवाच	விண்ணப்பித்துக்கொண்டார்.

स तु बद्धाञ्जलिः प्रह्वो विनीतो राक्षसेश्वरः । अब्रवीत्त्वरयोपेतः किं करोमीति राघवम् ॥

सः	அந்த
प्रह्वः	பக்திகொண்டவரும்
विनीतः तु	வினயஸம்பன்னருமான
राक्षसेश्वरः	ராக்ஷஸமன்னர்
बद्धाञ्जलिः	கைகூப்பிக்கொண்டு
त्वरया	பரபரப்புடன்
उपेतः	கூடியவராய்
राघवं	ஸ்ரீராமரிடம்
किं करोमि	'அடியேன் செய்கிறதென்ன'
इति	என்று
अब्रवीत्	வினவினார்.

तमब्रवीन्महातेजा लक्ष्मणस्योपशृण्वतः । विमृश्य राघवो वाक्यमिदं स्नेहपुरस्कृतम् ॥

महातेजाः	மகாதேஜஸ்வியாகிய
राघवः	ஸ்ரீராமர்
विमृश्य	ஆலோசித்து
लक्ष्मणस्य	லக்ஷ்மணர்
उपशृण्वतः	கேட்டுக்கொண்டிருக்கையில்
तं	விபீஷணரிடம்
स्नेहपुरस्कृतं	அன்பு ததும்பிய
वाक्यं	சொல்லொன்றை
इदं	இவ்வாறு
अब्रवीत्	புகன்றருளினார்:

कृतप्रयत्नकर्माणो विभीषण वनौकसः । रत्नैरर्थैश्च विविधैर्भूषणैश्चापि पूजय ॥ ४ ॥

विभीषण	"விபீஷண!
कृतप्रयत्नकर्माणः	முடிக்கப்பட்ட அரிய செயல்களுடைய
वनौकसः	வானரர்களை
रत्नैः	ரத்னங்களாலும்
अर्थैः च	பொருள்களாலும்
विविधैः	பலவகை
भूषणैः च अपि	ஆபரணங்களாலும்
पूजय	உபசரிப்பாயாக.

सहैभिरजिता लङ्का निर्जिता राक्षसेश्वर । हृष्टैः प्राणभयं त्यक्त्वा संग्रामेष्वनिवर्तिभिः ॥

राक्षसेश्वर	"ராக்ஷஸமன்ன!
अजिता	வெல்லப்படமுடியாத
लङ्का	இலங்கையானது
प्राणभयं	உயிரில் பயத்தையும்
त्यक्त्वा	விட்டொழித்து
हृष्टैः	உத்ஸாஹங்கொண்டவர்களும்
संग्रामेषु	போர்களில்
अनिवर्तिभिः	புறங்கொடாதவர்களுமான
एभिः सह	இவர்களுடன்கூடி (வானரர்களுடன்)
निर्जिता	ஜயிக்கப்பட்டது.

त इमे कृतकर्माणः पूज्यन्तां सर्ववानराः । धनरत्नप्रदानेन कर्मैषां सफलं कुरु ॥ ६ ॥

कृतकर्माणः	மேற்கொண்ட காரியங்களைசெய்துமுடித்த
ते	அந்த
इमे	இந்த
सर्ववानराः	எல்லா வானரர்களும்
धनरत्नप्रदानेन	பொருள்களுடையவும் இரத்தினங்களுடையவும்கொடையால்
पूज्यन्तां	உபசரிக்கப்படட்டும்;
एषां	இவர்களுடைய
कर्म	காரியத்தை
सफलं	பயன்பெற்றதாய்
कुरु	செய்வாயாக.

एवं सम्मानिताश्चैते मानार्हा मानद त्वया। भविष्यन्ति कृतज्ञेन निर्वृता हरियूथपाः ॥७॥

मानद	"மரியாதையளிப்பவனே!	कृतज्ञेन	செய்நன்றியுணர்ந்த[வனை
मानार्हाः	வெகுமதிக்குரியர்களான	त्वया	உன்னால்
एते	அந்த	एवं	மேற்கண்டவாறு
हरियूथपाः च	வானரஸேனைத் தலைவர்களும்	संमानिताः	கௌரவிக்கப்பட்டவர்களாய்
		निर्वृताः	சந்தோஷங்கொண்ட[வர்களாய்
		भविष्यन्ति	ஆவார்கள்.

त्यागिनं संग्रहीतारं सानुक्रोशं यशस्विनम्। सर्वे त्वामवगच्छन्ति ततः संबोधयाम्यहम् ॥

सर्वे	யாவரும்	यशस्विनं	புகழ்மிக்கவனையும்
त्वां	உன்னை	अवगच्छन्ति	அறிவார்கள்:
त्यागिनं	கொடையாளியாயும்	ततः	ஆகையால்
संग्रहीतारं	ஆதரிப்பவனையும்	अहं	நான்
सानुक्रोशं	தயையுள்ளவனையும்	सम्बोधयामि	எடுத்துரைக்கின்றேன்.

हीनं रतिगुणैः सर्वैरभिहन्तारमाहवे। त्यजन्ति नृपतिं सैन्याः संविग्नास्तं नरेश्वरम् ॥९॥

रतिगुणैः	'மனதைக்களிப்பிக்கும் குணங்கள்	नरेश्वरं	ஜனங்களுக்கதிபதியு[மான
सर्वैः	யாவற்றாலும்	तं	அந்த
हीनं	சூன்யனும்	नृपतिं	மன்னனை
आहवे	போரில்	सैन्याः	ஸைன்யங்கள்
अभिहन्तारं	போரிடுபவனும்	संविग्नाः	மனம் குன்றியவர்களாய்
		त्यजन्ति	கைவிடுகின்றார்கள்."

एवमुक्तस्तु रामेण वानरांस्तान्विभीषणः। रत्नार्थैः संविभागेन सर्वानेवाभ्यपूजयत् ॥

रामेण	ஸ்ரீராமரால்	सर्वान् एव	யாவரையும்
एवं	மேற்கண்டவாறு	संविभागेन	முறைப்படி
उक्तः	சொல்லப்பட்ட	रत्नार्थैः	ரத்னங்களாலும் பொருள்களாலும்
विभीषणः तु	விபீஷணரும்		
तान्	அந்த		
वानरान्	வானரர்கள்	अभ्यपूजयत्	பூஜித்தார்.

ततस्तान्पूजितान्दृष्ट्वा रत्नैरर्थैश्च यूथपान्। आरुरोह ततो रामस्तद्विमानमनुत्तमम् ॥११॥
अङ्केनादाय वैदेहीं लज्जमानां यशस्विनीम्। लक्ष्मणेन सह भ्रात्रा विक्रान्तेन धनुष्मता ॥

रामः	ஸ்ரீராமர்	रत्नैः	ரத்னங்களாலும்
ततः	அப்பொழுது	अर्थैः च	பொருள்களாலும்
तान्	அந்த	पूजितान्	பூஜிக்கப்பட்டவர்களாய்
यूथपान्	ஸேனைத்தலைவர்களை		

दृष्ट्वा	கவனித்து
ततः	அதன்மேல்
भ्राता	தம்பியும்
विक्रान्तेन	பராக்கிரமசாலியும்
धनुष्मता	வில்லாளியுமான
लक्ष्मणेन सह	லக்ஷ்மணருடன் கூட
लज्जमानां	லஜ்ஜைகொண்டவளும்
यशस्विनीं	கீர்த்திமதியுமாகிய
वैदेहीं	ஜானகிதேவியை
अङ्केन	மடிமீது
आदाय	கொண்டு
तत्	அந்த
अनुत्तमं	சிறந்த
विमानं	விமானத்தில்
आरुरोह	ஏறினர்.

अब्रवीच्च विमानस्थः पूजयन्सर्ववानरान् । सुग्रीवं च महावीर्यं काकुत्स्थः सविभीषणम् ॥

विमानस्थः	விமானத்தில் வீற்றிருக்கும்
काकुत्स्थः	ஸ்ரீராமர்
महावीर्यं	மகாவீர்யவானாகிய
सविभीषणं	விபீஷணருடன் கூடிய
सुग्रीवं च	ஸுக்ரீவனையும்
सर्ववानरान् च	எல்லா வானரர்களையும்
पूजयन्	கொண்டாடியவராய்
अब्रवीत्	பின்வருமாறு புகன்றருளினர்:

मित्रकार्यं कृतमिदं भवद्भिर्वानरोत्तमाः । अनुज्ञाता मया सर्वे यथेष्टं प्रतिगच्छत ॥ १४ ॥

भवद्भिः	"உங்களால்
मित्रकार्यं	மித்திரர்களின் கடமையானது
इदं	இப்பொழுது
कृतं	செய்துமுடிக்கப்பட்டது;
वानरोत्तमाः	வானரோத்தமர்கள்
सर्वे	யாவரும்
मया	என்னால்
अनुज्ञाताः	விடைகொடுக்கப்பட்டவர்களாய்
यथेष्टं	ஸுகமாய்
प्रतिगच्छत	சென்றுவாருங்கள்.

यत्तु कार्यं वयस्येन सुहृदा वा परन्तप । कृतं सुग्रीव तत्सर्वं भवताऽधर्मभीरुणा ॥ १५ ॥

परन्तप	"சத்ருஸம்ஹாரகராகிய
सुग्रीव	ஸுக்ரீவ!
वयस्येन	நண்பனால்தானாகட்டும்
सुहृदा वा	பக்திகொண்டவனால் தானாகட்டும்
यत्	எது
कार्यं	செய்யப்படவேண்டியதோ
तत्	அது
सर्वं तु	எல்லாமும்
अधर्मभीरुणा	அதர்மத்தில் அச்சங்கொண்ட
भवता	உன்னால்
कृतम्	செய்துமுடிக்கப்பட்டது

किष्किन्धां प्रतियाह्याशु स्वसैन्येनाभिसंवृतः ॥ १६ ॥

स्वसैन्येन	"தனதுஸேனையால்
अभिसंवृतः	சூழப்பட்டவனாய்
किष्किन्धां	கிஷ்கிந்தைக்கு
आशु	விரைவாய்
प्रतियाहि	திரும்பிச்செல்வாயாக."

स्वराज्ये वस लङ्कायां मया दत्ते विभीषण। न त्वां धर्षयितुं शक्ताः सेन्द्रा अपि दिवौकसः॥

विभीषण	"விபீஷண!	त्वां	உன்னை
मया	என்னால்	सेन्द्राः	இந்திரனுள்ளிட்ட
दत्ते	கொடுக்கப்பட்ட	दिवौकसः अपि	தேவர்களும்
स्वराज्ये	சொந்தராஜ்யமான	धर्षयितुं	தகைக்க
लङ्कायां	இலங்கையில்	शक्ताः न	வல்லரல்லர்.
वस	வஸித்துவருவாயாக;		

अयोध्यां प्रतियास्यामि राजधानीं पितुर्मम। अभ्यनुज्ञातुमिच्छामि सर्वांश्चामन्त्रयामि वः॥

मम	"எனது	अभ्यनुज्ञातुं	விடைகொடுக்க
पितुः	தந்தையாரது	इच्छामि	வேண்டுகிறேன்;
राजधानीं	ராஜதானியாகிய	वः	உங்கள்
अयोध्यां	அயோத்திக்கு	सर्वान् च	யாவரிடமும்
प्रतियास्यामि	செல்கின்றேன்;	आमन्त्रयामि	சொல்லிக்கொள்கின்றேன்."

एवमुक्तास्तु रामेण वानरास्ते महाबलाः। ऊचुः प्राञ्जलयो रामं राक्षसश्च विभीषणः॥

रामेण	ஸ்ரீராமரால்	विभीषणः च	விபீஷணரும்
एवं	மேற்கண்டவாறு	प्राञ्जलयः	அஞ்சலிஹஸ்தர்களாய்
उक्ताः	சொல்லப்பட்ட	रामं	ஸ்ரீராமரைப்பார்த்து
ते	அந்த	ऊचुः	பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்கள்:
महाबलाः	மகாபலசாலிகளான		
वानराः तु	வானரர்களும்		
राक्षसः	அரக்கராகிய		

अयोध्यां गन्तुमिच्छामः सर्वान्नयतु नो भवान्। उद्युक्ता विचरिष्यामो वनानि नगराणि च॥

अयोध्यां	"அயோத்திக்கு	नयतु	அழைத்துச்செல்வீராக;
गन्तुं	வர	उद्युक्ताः	ஜாக்ரதைகொண்டவர்களாய்
इच्छामः	விரும்புகின்றோம்;	वनानि	காடுகளிலும்
भवान्	தேவரீர்	नगराणि च	நகரங்களிலும்
नः	எங்கள்	विचरिष्यामः	ஸஞ்சரிப்போம்.
सर्वान्	எல்லோரையும்		

दृष्ट्वा त्वामभिषेकार्द्रं कौसल्यामभिवाद्य च। अचिरेणागमिष्यामः स्वान्गृहान्नृपतेः सुत॥

नृपतेः	"சக்ரவர்த்தியின்	कौसल्यां	கோஸலாதேவியை
सुत	திருக்குமாரரே,	अभिवाद्य च	நமஸ்கரித்துவிட்டும்
त्वां	தேவரீரை	अचिरेण	சீக்கிரமாகவே
अभिषेकार्द्रं	பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டவராய்	स्वान् गृहान्	எங்களது வீடுகளுக்கு
दृष्ट्वा	தரிசித்து விட்டும்,	आगमिष्यामः	திரும்பிச்செல்வோம்."

एवमुक्तस्तु धर्मात्मा वानरैः सविभीषणैः । अब्रवीद्राघवः श्रीमान्ससुग्रीवविभीषणान् ॥

सविभीषणैः	விபீஷணருள்ளிட்ட	तु	அப்பொழுது
वानरैः	வானரர்களால்	ससुग्रीव-विभीषणान्	ஸுக்ரீவனுடனும் விபீஷணருடனும் கூட விருக்கும் அவர்களைப் பார்த்து
एवं	மேற்கண்டவாறு	अब्रवीत्	பின் வருமாறு மொழிந்தருளினார்:
उक्तः	விஜ்ஞாபிக்கப்பட்டவரும்		
धर्मात्मा	தர்மாத்மாவும்		
श्रीमान्	ஸ்ரீமானுமாகிய		
राघवः	ஸ்ரீராமர்		

प्रियात्प्रियतरं लब्धं यदहं ससुहृज्जनः । सर्वैर्भवद्भिः सहितः प्रीतिं लप्स्ये पुरीं गतः ॥

अहं	"நான்	प्रीतिं	சந்துஷ்டியை
भवद्भिः	உங்கள்	लप्स्ये	அடைவேன்
सर्वैः सहितः	யாவரோடும் கூடி	यत्	என்ற இக்காரணத்தால்
ससुहृज्जनः	நண்பர் வர்க்கத்துடன் கூடியவனாய்	प्रियात्	ஆனந்தத்திலும்
पुरीं	நகருக்கு	प्रियतरं	மிக்க ஆனந்தமானது
गतः	சென்று	लब्धम्	அடையப்பட்டது.

क्षिप्रमारोह सुग्रीव विमानं वानरैः सह । त्वमप्यारोह सामात्यो राक्षसेन्द्र विभीषण ॥

सुग्रीव	"ஸுக்ரீவ !	राक्षसेन्द्र	அரக்கமன்னனாகிய
वानरैः सह	வானரர்களுடன்	विभीषण	விபீஷண!
क्षिप्रं	விரைவாய்	सामात्यः	மந்திரிகளுடன்
विमानं	விமானத்தில்	त्वं	நீயும்
आरोह	ஏறுவாயாக;	अध्यारोह	ஏறுவாயாக."

ततस्तत्पुष्पकं दिव्यं सुग्रीवः सह सेनया । अध्यारोहत्त्वरञ्शीघ्रं सामात्यश्च विभीषणः ॥

ततः	அப்பொழுது	अध्यारोहत्	ஏறிக்கொண்டான்;
सुग्रीवः	ஸுக்ரீவன்	सामात्यः	மந்திரிமார்களுடன் கூட
सेनया सह	ஸேனையுடன்கூட	विभीषणः	விபீஷணரும்
शीघ्रं	விரைவாய்	त्वरन्	துரிதமாய்
तत्	அந்த	च	அவ்விதமே ஏறிக் கொண்டார்.
दिव्यं	தெய்வீகமான		
पुष्पकं	புஷ்பகவிமானத்தில்		

तेष्वारूढेषु सर्वेषु कौबेरं परमासनम् । राघवेणाभ्यनुज्ञातमुत्पपात विहायसम् ॥ १६ ॥

तेषु	அவர்கள்	राघवेण	ஸ்ரீராமரால்
सर्वेषु	யாவரும்	अभ्यनुज्ञातं	ஆஜ்ஞாபிக்கப்பட்டதாய்
आरूढेषु	ஏறிக்கொண்டவளவில்	विहायसं	ஆகாயத்தில்
कौबेरं	குபேரரது	उत्पपात	கிளம்பிற்று.
परमासनं	விமானமானது		

ययौ तेन विमानेन हंसयुक्तेन भास्वता । प्रहृष्टश्च प्रतीतश्च बभौ रामः कुबेरवत् ॥१७॥

रामः	ஸ்ரீராமர்	ययौ	சென்றார்;
हंसयुक्तेन	அன்னப்பறவைகளுடன் கூடியதும்	कुबेरवत्	குபேரன் போலவே
भास्वता	பிரகாசிக்கின்றது[மான	प्रहृष्टः च	ஆனந்தங்கொண்டவராயும்
तेन	அந்த	प्रतीतः च	கொண்டாடப்பட்டவராயும்
विमानेन	விமானத்திலேறி	बभौ	விளங்கினார்.

ते सर्वे वानरा हृष्टा राक्षसाश्च महाबलाः । यथासुखमसंबाधं दिव्ये तस्मिन्नुपाविशन् ॥

हृष्टाः	உத்ஸாஹங்கொண்டவர்களும்	दिव्ये	தெய்வத்தன்மை வாய்ந்த
महाबलाः	மகாபலசாலிகளுமான	तस्मिन्	அதில் (விமானத்தில்)
वानराः	வானரர்களும்	यथासुखं	ஸுகமாயும்
राक्षसाः	அரக்கர்களுமான	असम्बाधं	வருத்தமில்லாமலும்
ते	அவர்கள்	उपाविशन्	உட்கார்ந்திருந்தார்கள்.
सर्वे च	யாவரும்		

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे पञ्चविंशत्युत्तरशततमः सर्गः ॥

आदितः श्लोकाः 20357 युद्धकाण्डे आदितः श्लोकाः 5682

षड्विंशत्युत्तरशततमः सर्गः—நூற்றிருபத்தாறுவது ஸர்க்கம் ॥ १२६ ॥

सीतायै तत्तद्देशप्रदर्शनम् – ஸீதாதேவிக்கு அந்தந்த தேசங்களை காண்பித்தல்

अनुज्ञातं तु रामेण तद्विमानमनुत्तमम् । उत्पपात महामेघः श्वसनेनोद्धतो यथा ॥ १ ॥

तु	அப்பொழுது	श्वसनेन	காற்றால்
रामेण	ஸ்ரீராமரால்	उद्धतः	ஏவப்பட்ட
अनुज्ञातं	ஆஜ்ஞாபிக்கப்பட்ட	महामेघः यथा	பெரும் மேகம்போல
तत्	அந்த	उत्पपात	உயரப் பறந்து சென்றது.
अनुत्तमं	மிக உத்தமமான		
विमानं	விமானமானது		

पातयित्वा ततश्चक्षुः सर्वतो रघुनन्दनः । अब्रवीन्मैथिलीं सीतां रामः शशिनिभाननाम् ॥

रघुनन्दनः	ரகுகுலதிலகரான	शशिनिभाननां	சந்திரனையொத்த முகமண்டலமுடைய
रामः	ஸ்ரீராமர்	मैथिलीं	ஜனகர் திருமகளான
ततः	அப்பொழுது	सीतां	ஸீதாதேவியைப் பார்த்து
सर्वतः	நாற்புறமும்	अब्रवीत्	பின்வருமாறு கூறினார்:
चक्षुः	பார்வையை		
पातयित्वा	செலுத்தி,		

कैलासशिखराकारे त्रिकूटशिखरे स्थिताम् । लङ्कामीक्षस्व वैदेहि निर्मितां विश्वकर्मणा ॥

वैदेहि	"ஜானகி!	स्थितां	இருக்கின்றதும்
कैलास-शिखराकारे	கைலாஸசிகரத்தை யொத்த	विश्वकर्मणा	விச்வகர்மாவால்
त्रिकूटशिखरे	திரிகூடபர்வதத்தின் சிகரத்தில்	निर्मितां	சிருஷ்டிக்கப்பட்டது
		लङ्कां	இலங்கையை [மான
		ईक्षस्व	பார்ப்பாயாக.

एतदायोधनं पश्य मांसशोणितकर्दमम् । हरीणां राक्षसानां च सीते विशसनं महत् ॥४॥

सीते	"ஸீதே!	महत्	பெரும்
मांसशोणितकर्दमं	மாம்ஸத்தாலும் ரத்தத்தாலும் சேருகியதும்	विशसनं	கொலையுற்றதுமான
		एतत्	இந்த
हरीणां	வானரர்களுடையவும்	आयोधनं	போர்க்களத்தை
राक्षसानां च	அரக்கர்களுடையவும்	पश्य	பாராய்.

अत्र दत्तवरः शेते प्रमाथी राक्षसेश्वरः । तव हेतोर्विशालाक्षि रावणो निहतो मया ॥५॥

विशालाक्षि	"தடங்கண்ணாய்!	रावणः	ராவணன்
अत्र	இவ்விடத்தில்	तव हेतोः	உனது காரணமாய்
राक्षसेश्वरः	அரக்கர்மன்னனும்	मया	என்னால்
दत्तवरः	வரங்கள் பெற்றவனும்	निहतः	கொல்லப்பட்டு
प्रमाथी	துரோகியுமான	शेते	சாய்ந்துகிடக்கின்றான்.

कुम्भकर्णोऽत्र निहतः प्रहस्तश्च निशाचरः । धूम्राक्षश्चात्र निहतो वानरेण हनूमता ॥६॥

अत्र	"இவ்விடத்தில்	अत्र च	இவ்விடத்தில்தான்
कुम्भकर्णः	கும்பகர்ணன்	वानरेण	வானரராகிய
निहतः	கொல்லப்பட்டான்;	हनुमता	ஹனுமாரால்
निशाचरः	அரக்கனான	धूम्राक्षः	தூம்ராக்ஷன்
प्रहस्तः	பிரஹஸ்தனும்	निहतः	கொல்லப்பட்டான்.
च	அவ்விதமே கொல்லப்பட்டான்;		

विद्युन्माली हतश्चात्र सुषेणेन महात्मना ॥ ७ ॥

अत्र च	"இவ்விடத்தில்தான்	महात्मना	மகா ஆற்றல்கொண்ட
विद्युन्माली	வித்யுன்மாலீயென்பவன்	सुषेणेन	ஸுஷேணனால்
		हतः	கொல்லப்பட்டான்.

लक्ष्मणेनेन्द्रजिच्चात्र रावणिर्निहतो रणे । अङ्गदेनात्र निहतो विकटो नाम राक्षसः ॥८॥

अत्र च	இவ்விடத்தில்தான்	अत्र	இவ்விடத்தில்
रणे	போரில்	अङ्गदेन	அங்கதனால்
लक्ष्मणेन	லக்ஷ்மணனால்	विकटः नाम	விகடன் என்ற
रावणिः	ராவணனது புதல்வனான	राक्षसः	அரக்கன்
इन्द्रजित्	இந்திரஜித்து	निहतः	கொல்லப்பட்டான்.
निहतः	கொல்லப்பட்டான்;		

विरूपाक्षश्च दुर्धर्षो महापार्श्वमहोदरौ । अकम्पनश्च निहतो बलिनोऽन्ये च राक्षसाः ॥९॥
त्रिशिराश्चातिकायश्च देवान्तकनरान्तकौ । युद्धोन्मत्तश्च मत्तश्च राक्षसप्रवरावुभौ ॥ १० ॥

दुर्धर्षः	“வெல்லற்கரிய
विरूपाक्षः च	விருபாக்ஷனும்
निहतः	கொல்லப்பட்டான் ;
महापार्श्व-महोदरौ	மஹாபார்ச்வனும் மஹோதரனும்
अकम्पनः च	அகம்பனனும்
अन्ये	மற்ற
बलिनः	பலசாலிகளான
राक्षसाः	அரக்கர்களாகிய
त्रिशिराः च	த்ரிசிரஸும்
अतिकायः च	அதிகாயனும்
देवान्त-कनरान्तकौ	தேவாந்தகனும் நராந்தகனும்
उभौ	இரு
राक्षसप्रवरौ	ராக்ஷஸோத்தமர்களான
युद्धोन्मत्तः च	யுத்தோன்மத்தனும்
मत्तः च	மத்தனும்
च	அப்படியே இங்கு கொல்லப்பட்டார்கள்.

मकराक्षश्च दुर्धर्षो मया युधि निपातितः । यज्ञशत्रुर्ब्रह्मशत्रुः शोणिताक्षश्च वीर्यवान् ॥

युधि	“போரில்
मया	என்னால்
दुर्धर्षः	வெல்லற்கரிய
मकराक्षः च	மகராக்ஷனும்
निपातितः	கொல்லப்பட்டான் ;
यज्ञशत्रुः	யஜ்ஞசத்ருவும்
ब्रह्मशत्रुः	பிரம்மசத்ருவும்
वीर्यवान्	வீர்யவானான
शोणिताक्षः	சோணிதாக்ஷனும்
च	கொல்லப்பட்டார்கள்.

यूपाक्षश्च प्रजङ्घश्च निहतौ तु महाहवे । विद्युज्जिह्वोऽत्र निहतो राक्षसो भीमदर्शनः ॥

अत्र तु	“இவ்விடத்தில் தான்
यूपाक्षः च	யூபாக்ஷனும்
प्रजङ्घः च	பிரஜங்கனும்
महाहवे	பெரும் போரில்
निहतौ	கொல்லப்பட்டார்கள் ;
भीमदर्शनः	பயங்கரத் தோற்றமுடைய
राक्षसः	அரக்கனான
विद्युज्जिह्वः	வித்யுஜ்ஜிஹ்வனும்
निहतः	கொல்லப்பட்டான்.

निकुम्भश्चैव कुम्भश्च कुम्भकर्णात्मजो बली । वज्रदंष्ट्रश्च दंष्ट्रश्च बहवो राक्षसा हताः ॥

कुम्भकर्णात्मजः	“கும்பகர்ணன் புதல்வனும்
बली	பலசாலியுமான
निकुम्भः च	நிகும்பனும்
कुम्भः च	கும்பனும்
वज्रदंष्ट्रः च	வஜ்ரதம்ஷ்ட்ரனும்
दंष्ट्रः	தம்ஷ்ட்ரனும் ஆகிய
बहवः	பல
राक्षसाः एव	அரக்கர்களும்
हताः	கொல்லப்பட்டார்கள்.

अत्र मण्डोदरी नाम भार्या तं पर्यदेवयत् । सपत्नीनां सहस्रेण सास्रेण परिवारिता ॥१४॥

अत्र	“இங்கு
भार्या	ராவணன்மனைவியான
मण्डोदरी नाम	மண்டோதரி என்பவள்
सास्रेण	கண்ணீர்கொண்ட
सपत्नीनां	சக்களத்திகளின்
सहस्रेण	ஆயிரத்தவரால்
परिवारिता	சூழப்பட்டவளாய்
तं	ராவணனைக்குறித்து
पर्यदेवयत्	புலம்பியழுதாள்.

एतत्तु दृश्यते तीर्थं समुद्रस्य वरानने । यत्र सागरमुत्तीर्य तां रात्रिमुषिता वयम् ॥१५॥

वरानने	"ஸுந்தரீ!	वयं	நாங்கள்
एतत्	இதோ	सागरं	சமுத்திரத்தை
समुद्रस्य	சமுத்திரத்தின்	उत्तीर्य	தாண்டி
तीर्थं	கரை	तां	அந்த
दृश्यते	காணப்படுகிறது;	रात्रिं	இரவு
यत्र तु	இந்த இடத்தில்தான்	उषिताः	தங்கியிருந்தோம்.

एष सेतुर्मया बद्धः सागरे सलिलार्णवे । तव हेतोर्विशालाक्षि नलसेतुः सुदुष्करः ॥१६॥

विशालाक्षि	"தடங்கண்ணுய்!	नलसेतुः	நளஸேதுவென்ற
तव हेतोः	உனதுகாரணமாய்	एषः	இந்த
सलिलार्णवे	நீர்நிறைந்த	सेतुः	அணையானது
सागरे	சமுத்திரத்தில்	मया	என்னுல்
सुदुष्करः	கட்டுவதற்கரிய	बद्धः	கட்டப்பட்டது.

पश्य सागरमक्षोभ्यं वैदेहि वरुणालयम् । अपारमभिगर्जन्तं शङ्खशुक्तिनिषेवितम् ॥१७॥

वैदेहि	"ஜானகி	अभिगर्जन्तं	முழங்குவதும்
अक्षोभ्यं	கலக்கமுடியாததும்	शङ्खशुक्ति- निषेवितं	சங்குகளாலும் முத்துச்சிப்பிகளாலும் நிறைந்ததுமான
वरुणालयं	வருணனுக்கிரிப்பிடமானதும்	सागरं	சமுத்திரத்தை
अपारं	கரையில்லாததும்	पश्य	பாராய்.

हिरण्यनाभं शैलेन्द्रं काञ्चनं पश्य मैथिलि । विश्रमार्थं हनुमतो भित्त्वा सागरमुत्थितम् ॥

मैथिलि	"ஜானகி!	उत्थितं	வெளிவந்த
हनुमतः	ஹனுமாருக்கு	काञ्चनं	பொன்மயமான
विश्रमार्थं	களைப்பாறுவதக்காக	हिरण्यनाभं- शैलेन्द्रं	மைனுகமலைச்சிரேஷ்டத்தை
सागरं	சமுத்திரத்தை		
भित्त्वा	பிளந்துகொண்டு	पश्य	பாராய்.

एतत्कुक्षौ समुद्रस्य स्कन्धावारनिवेशनम् ॥ १९ ॥

समुद्रस्य	"சமுத்திரத்தின்	एतत्	இது
कुक्षौ	நடுவில்	स्कन्धावार- निवेशनम्	ஸேனைக்கூட்டங்கள் தங்குமிடம்.

एतत्तु दृश्यते तीर्थं सागरस्य महात्मनः । सेतुबन्ध इति ख्यातं त्रैलोक्येनाभिपूजितम् ॥
शुभं पवित्रं परमं महापातकनाशनम् ॥ २० ॥

सेतुबन्धः इति	"ஸேதுபந்தம் என்று	अभिपूजितं	கொண்டாடப்பட்ட
ख्यातं	பிரசித்தமானதும்	शुभं	நலந்தருவதும் [தும்
त्रैलोक्येन	மூவுலகத்தாலும்	परमं	பரம

पवित्रं	பாவனமானதும்	सागरस्य	சமுத்திரத்தின்
महापातकनाशनं	பெரும் பாதகங்களை ஒழிக்கவல்லதுமான	तीर्थं	கரையானது
महात्मनः	மஹாத்மாவாகிய	एतत् तु	இதோ
		दृश्यते	காணப்படுகின்றது.

अत्र पूर्वं महादेवः प्रसादमकरोत्प्रभुः ॥ २१ ॥

अत्र	"இவ்விடத்தில்	महादेवः	சிவபெருமான்
पूर्वं	முன்பு	प्रसादं अकरोत्	அனுக்ரஹித்தார்
प्रभुः	சர்வசக்தராகிய		

अत्र राक्षसराजोऽयमाजगाम विभीषणः ॥ २२ ॥

अत्र	"இந்த இடத்தில்	विभीषणः	விபீஷணன்
अयं	இந்த	आजगाम	வந்தான்.
राक्षसराजः	ராக்ஷஸமன்னனுன		

एषा सा दृश्यते सीते किष्किन्धा चित्रकानना। सुग्रीवस्य पुरी रम्या यत्र वाली मया हतः॥

सीते	"ஸீதே!	एषा	இந்த
यत्र	எந்த இடத்தில்	सुग्रीवस्य	ஸுக்ரீவனது
मया	என்னல்	रम्या पुरी	அழகிய நகரான
वाली	வாலி	चित्रकानना	அழகியசோலைகளுற்ற
हतः	கொல்லப்பட்டானே,	किष्किन्धा	கிஷ்கிந்தை
सा	அந்த	दृश्यते	காணப்படுகிறது."

अथ दृष्ट्वा पुरीं सीता किष्किन्धां वालिपालिताम्। अब्रवीत्प्रश्रितं वाक्यं रामं प्रणयसाध्वसा ॥

अथ	அப்பொழுது	प्रणयसाध्वसा	அன்புடன் அச்சங் கொண்டவளாய்
सीता	ஸீதாதேவி	रामं	ஸ்ரீராமரிடம்
वालिपालितां	வாலியால் பரிபாலிக்கப்பட்ட	प्रश्रितं	வணக்கமாய்
किष्किन्धां	கிஷ்கிந்தா[	वाक्यं	சொல்லொன்றை
पुरीं	நகரை	अब्रवीत्	பின்வருமாறுகூறினுள்:
दृष्ट्वा	பார்த்து		

सुग्रीवप्रियभार्याभिस्ताराप्रमुखतो नृप। अन्येषां वानरेन्द्राणां स्त्रीभिः परिवृता ह्यहम् ॥
गन्तुमिच्छे सहायोध्यां राजधानीं त्वयाऽनघ ॥ २५ ॥

अनघ	"களங்கமற்ற	स्त्रीभिः	மனைவிகளாலும்
नृप	சக்ரவர்த்தியாரே!	परिवृता हि	சூழப்பட்டவளாகவே
अहं	நான்	त्वया सह	தேவரீருடன்
ताराप्रमुखतः	தாரைமுதலான	राजधानीं	ராஜதானியாகிய
सुग्रीवप्रियभार्याभिः	ஸுக்ரீவரது பிரிய மனைவிகளாலும்	अयोध्यां	அயோத்திக்கு
अन्येषां	மற்ற	गन्तुं	செல்ல
वानरेन्द्राणां	வானரோத்தமர்களின்	इच्छे	விரும்புகின்றேன்."

एवमुक्तोऽथ वैदेह्या राघवः प्रत्युवाच ताम्। एवमस्त्विति किष्किन्धां प्राप्य संस्थाप्य राघवः॥
विमानं प्रेक्ष्य सुग्रीवं वाक्यमेतदुवाच ह ॥ २६ ॥

अथ	அப்பொழுது	राघवः	ஸ்ரீராமர்
वैदेह्या	ஸீதாதேவியால்	किष्किन्धां	கிஷ்கிந்தைக்கு
एवं	மேற்கண்டவாறு	प्राप्य	வந்து
उक्तः	சொல்லப்பட்ட	विमानं	விமானத்தை
राघवः	ஸ்ரீராமர்	संस्थाप्य	நிறுத்தி,
तां	அவளைப்பார்த்து	सुग्रीवं	ஸுக்ரீவனை
एवं	'அப்படியே	प्रेक्ष्य	பார்த்து
अस्तु	ஆகட்டும்'	एतत्	பின்வரும்
इति	என்று	वाक्यं	சொல்லை
प्रत्युवाच	பதிலுரைத்தார்;	उवाच ह	மொழிந்தார்:

ब्रूहि वानरशार्दूल सर्वान्वानरपुङ्गवान्। स्वदारसहिताः सर्वे ह्ययोध्यां यान्तु सीतया ॥

वानरशार्दूल	வானரோத்தம!	सर्वे हि	யாவரும்
सर्वान्	எல்லா	स्वदारसहिताः	தமது பத்னிகளுடன் கூடினவர்களாய்
वानरपुङ्गवान्	வானரோத்தமர்களையும்	अयोध्यां	அயோத்திக்கு
ब्रूहि	பின்வருமாறு ஆக்ஞாபிப்பாய்;	सीतया	ஸீதையுடன்
		यान्तु	புறப்பட்டுவரட்டும்.

तथा त्वमपि सर्वाभिः स्त्रीभिः सह महाबल। अयोध्यां याहि सीतायाः काम एष प्रपूर्यताम्॥
अभित्वरस्व सुग्रीव गच्छामः प्लवगेश्वर ॥ २८ ॥

महाबल	"மகாபலசாலியே!	सीतायाः	ஸீதையின்
तथा	அவ்வண்ணமே	एषः कामः	இந்த மனோரதம்
त्वं अपि	நீயும்	प्रपूर्यतां	பூர்த்திசெய்யப்படட்டும்;
सर्वाभिः	எல்லா		
स्त्रीभिः	மனைவிகளுடன்	प्लवगेश्वर	வானரமன்னனான
सह	கூட	सुग्रीव	ஸுக்ரீவ!
अयोध्यां	அயோத்திக்கு	अभित्वरस्व	துரிதப்படுத்துவாயாக;
याहि	புறப்படுவாயாக;	गच्छामः	நாம் புறப்படுவோம்.

एवमुक्तस्तु सुग्रीवो रामेणामिततेजसा। वानराधिपतिः श्रीमांस्तैश्च सर्वैः समावृतः ॥
प्रविश्यान्तःपुरं शीघ्रं तारामुद्वीक्ष्य सोऽब्रवीत् ॥ २९ ॥

अमिततेजसा	ஒப்பிலா மஹிமை கொண்ட	श्रीमान्	ஸ்ரீமானும்
		वानराधिपतिः	வானரமன்னனுமாகிய
रामेण	ஸ்ரீராமரால்	सुग्रीवः	ஸுக்ரீவன்
एवं	மேற்கண்டவாறு	तु	அப்பொழுது
उक्तः	சொல்லப்பட்டவனும்	तैः	அவர்கள்

सर्वैः च	யாவராலும்
समावृतः	சூழப்பட்டவனாய்
शीघ्रं	விரைவாய்
अन्तःपुरं	அந்தப்புரத்திற்கு
प्रविश्य	சென்று
तारां	தாரையை
उद्वीक्ष्य	பார்த்து
सः	அவன்
अब्रवीत्	பின்வருமாறு மொழிந்தான்:

प्रिये त्वं सह नारीभिर्वानराणां महात्मनाम् । राघवेणाभ्यनुज्ञाता मैथिलीप्रियकाम्यया ॥

प्रिये	"காதலி!
महात्मानां	மகா ஆற்றல்கொண்ட
वानराणां	வானரர்களின்
नारीभिः सह	மனைவிமார்களுடன் கூட
त्वं	நீ
मैथिलीप्रिय-काम्यया	ஜானகியின் மனோரதத்தை நிறைவேற்ற விருப்பத்தால்
राघवेण	ஸ்ரீராமரால்
अभ्यनुज्ञाता	ஆஜ்ஞாபிக்கப்பட்டிருக்கின்றனை.

त्वर त्वमभिगच्छामो गृह्य वानरयोषितः । अयोध्यां दर्शयिष्यामः सर्वा दशरथस्त्रियः ॥

त्वं	"நீ
त्वर	துரிதப்படுவாயாக;
वानरयोषितः	வானரஸ்த்ரீகளை
गृह्य	அழைத்துக்கொண்டு
अयोध्यां	அயோத்திக்கு
अभिगच्छामः	செல்வோம்;
दशरथस्त्रियः	தசரதரின் மனைவிமார்கள்
सर्वाः	யாவரையும்
दर्शयिष्यामः	தரிசிப்போம்."

सुग्रीवस्य वचः श्रुत्वा तारा सर्वाङ्गशोभना । आहूय चाब्रवीत्सर्वा वानराणां तु योषितः ॥

सर्वाङ्गशोभना	சர்வாங்கஸுந்தரியான
तारा	தாரை
सुग्रीवस्य	ஸுக்ரீவனது
वचः	மொழியை
श्रुत्वा	சிரமேற்கொண்டு
तु	அப்பொழுது
वानराणां	வானரர்களுடைய
योषितः	மனைவிமார்கள்
सर्वाः च	யாவரையும்
आहूय	அழைத்து
अब्रवीत्	பின்வருமாறு புகன்றுள்:

सुग्रीवेणाभ्यनुज्ञाता गन्तुं सर्वैश्च वानरैः । मम चापि प्रियं कार्यमयोध्यादर्शनेन च ॥३३॥
प्रवेशं चापि रामस्य पौरजानपदैः सह । विभूतिं चैव सर्वासां स्त्रीणां दशरथस्य च ॥

अयोध्यादर्शनेन	"அயோத்தியின் தரிசனத்தோடு
दशरथस्य	தசரதரின்
स्त्रीणां	மனைவிமார்கள்
सर्वासां	எல்லோருடையவும்
विभूतिं च एव	பெருமைக்காகவும்
पौरजानपदैः	நகரஜனங்களோடும்
सह	தேசஜனங்களோடும் கூட
रामस्य	ஸ்ரீராமது
प्रवेशं अपि च	பிரவேசத்திற்காகவும்
वानरैः	வானரர்கள்
सर्वैः च	யாவரோடும்
च च गन्तुं	தக்ஷணமே செல்ல
सुग्रीवेण	ஸுக்ரீவரால்
अभ्यनुज्ञाताः	ஆஜ்ஞாபிக்கப்பட்டிருக்கின்றீர்கள்;
मम	எனது
प्रियं अपि च	இஷ்டமாகவும்
कार्यम्	செய்யப்பட வேண்டியது."

तारया चाभ्यनुज्ञाताः सर्वा वानरयोषितः । नेपथ्यं विधिपूर्वेण कृत्वा चापि प्रदक्षिणम्॥
अध्यारोहन्विमानं तत्सीतादर्शनकाङ्क्षया । दृष्ट्वा सीतां ततः सर्वा विस्मिता वाग्भिरीडिरे॥

तारया	தாரையால்	तत् विमानं	அந்த விமானத்தில்
अभ्यनुज्ञाताः	ஆஜ்ஞாபிக்கப்பட்ட	अध्यारोहन्	ஏறினார்கள்;
वानरयोषितः	வானரஸ்த்ரீகள்	ततः	அங்கு
सर्वाः च	யாவரும்	सर्वाः	யாவரும்
नेपथ्यं	அலங்காரத்தையும்	सीतां	ஸீதாதேவியை
विधिपूर्वेण	முறைப்படி	दृष्ट्वा	தரிசித்து
प्रदक्षिणं	நமஸ்காரத்தையும்	विस्मिताः	ஆச்சர்யங்கொண்டவர்களாய்
कृत्वा अपि च	செய்து விட்டும்		
सीतादर्शन-कांक्षया	ஸீதாதேவியைக் காணும் ஆவலுடன்	वाग्भिः	மொழிகள்கொண்டு
		ईडिरे	துதித்தனர்.

ताभिः सहोत्थितं शीघ्रं विमानं प्रेक्ष्य राघवः । ऋश्यमूकसमीपे तु वैदेहीं पुनरब्रवीत् ॥

राघवः	ஸ்ரீராமர்	तु	அப்பொழுது
विमानं	விமானத்தை	ऋश्यमूकसमीपे	ரிச்யமூக சமீபத்தில்
ताभिः सह	அவர்களுடன்கூட	वैदेहीं	ஜானகீதேவியைப் [பார்த்து
शीघ्रं	விரைவாய்	पुनः	மீளவும்
उत्थितं	உயரக்கிளம்பியதாய்	अब्रवीत्	பின்வருமாறு மொழிந்தார்:
प्रेक्ष्य	கவனித்து,		

दृश्यतेऽसौ महान्सीते सविद्युदिव तोयदः । ऋश्यमूको गिरिश्रेष्ठः काञ्चनैर्धातुभिर्वृतः ॥

सीते	"ஸீதே!	ऋश्यमूकः	ரிச்யமூக
महान्	பெரிதும்,	गिरिश्रेष्ठः	பர்வதோத்தமமானது
काञ्चनैः	பொன்		
धातुभिः	தாதுக்களால்	सविद्युत्	மின்னல்களுடன் [கூடிய
वृतः	நிறைந்ததுமான	तोयदः इव	மேகம்போல்
असौ	இந்த	दृश्यते	காணப்படுகிறது.

अत्राहं वानरेन्द्रेण सुग्रीवेण समागतः । समयश्च कृतः सीते वधार्थं वालिनो मया ॥

सीते	"ஸீதே!	मया	என்னால்
अत्र	இவ்விடத்தில்	वालिनः	வாலியின்
अहं	நான்	वधार्थं	வதைக்காக
वानरेन्द्रेण	வானரமன்னனான	समयः च	ப்ரதிஜ்ஞையும்
सुग्रीवेण	ஸுக்ரீவனோடு	कृतः	செய்யப்பட்டது.
समागतः	நட்புற்றேன்;		

एषा सा दृश्यते पम्पा नलिनी चित्रकानना । त्वया विहीनो यत्राहं विललाप सुदुःखितः ॥

यत्र	"எவ்விடத்தில்
अहं	நான்
त्वया विहीनः	உன்னைப்பிரிந்து
सुदुःखितः	மிகத் துயரம் மேலிட்டவனாய்
विललाप	புலம்பிக்கதறினேனோ
सा	அந்த
चित्रकानना	அழகியசோலைகளுற்ற
पम्पा	பம்பா
नलिनी	ஸரஸ்
एषा	இதோ
दृश्यते	காணப்படுகிறது.

अस्यास्तीरे मया दृष्टा शबरी धर्मचारिणी । अत्र योजनबाहुश्च कबन्धो निहतो मया ॥

अस्याः	"இதனது
तीरे	கரையில்
मया	என்னால்
धर्मचारिणी	தர்மிஷ்டையான
शबरी	சபரி
दृष्टा	காணப்பட்டாள்;
अत्र च	இவ்விடத்தில்தான்
योजनबाहुः	எட்டு மைல் நீண்ட கைகள் கொண்ட
कबन्धः	கபந்தன்
मया	என்னால்
निहतः	கொல்லப்பட்டான்.

दृश्यते च जनस्थाने सीते श्रीमान्वनस्पतिः । यत्र युद्धं महद्वृत्तं तव हेतोर्विलासिनि ॥
रावणस्य नृशंसस्य जटायोश्च महात्मनः ॥ ४२ ॥

विलासिनि	"ஸுந்தரீ!
सीते	ஸீதே!
तव हेतोः	உனது நிமித்தமாய்
यत्र	எவ்விடத்தில்
नृशंसस्य	கொடியோனான
रावणस्य च	ராவணனுக்கும்
महात्मनः	மகாத்மாவான
जटायोः च	ஜடாயுவுக்கும்
महत् युद्धं	பெரும் போர்
वृत्तं	நிகழ்ந்ததோ அந்த
जनस्थाने	ஜனஸ்தானத்தில்
श्रीमान्	கீர்த்திபெற்ற
वनस्पतिः	விருக்ஷமானது
दृश्यते	காணப்படுகிறது.

खरश्च निहतो यत्र दूषणश्च निपातितः । त्रिशिराश्च महावीर्यो मया बाणैरजिह्मगैः ॥
एतत्तदाश्रमपदमस्माकं वरवर्णिनि ॥ ४३ ॥

वरवर्णिनि	"உத்தமியே!
यत्र	எவ்விடத்தில்
मया	என்னால்
अजिह्मगैः	குறிதப்பாது பாயவல்ல
बाणैः	பாணங்களால்
खरः च	கரனும்
निहतः	கொல்லப்பட்டானோ,
दूषणः च	தூஷணனும்
निपातितः	வீழ்த்தபபட்டானோ,
महावीर्यः	மகாவீர்யசாலியான
त्रिशिराः	த்ரிசிரஸும்
च	அப்படியே கொல்லப்பட்டானோ;
तत्	அந்த
अस्माकं	நமது
आश्रमपदं	ஆச்ரமஸ்தானம்
एतत्	இது.

पर्णशाला तथा चित्रा दृश्यते शुभदर्शना । यत्र त्वं राक्षसेन्द्रेण रावणेन हृता बलात् ॥

यत्र	"எங்கு	तथा	அப்படிப்பட்ட
त्वं	நீ	चित्रा	அழகியதும்
राक्षसेन्द्रेण	ராக்ஷஸமன்னனான	शुभदर्शना	மங்களமான தோற்றமுடையதுமான
रावणेन	ராவணனால்		
बलात्	பலாத்காரமாய்	पर्णशाला	பர்ணசாலை
हृता	அபகரிக்கப்பட்டனையோ	दृश्यते	காணப்படுகிறது.

एषा गोदावरी रम्या प्रसन्नसलिला शिवा । अगस्त्यस्याश्रमो ह्येष दृश्यते पश्य मैथिलि ॥

एषा	"இது	मैथिलि	ஜானகி!
रम्या	அழகியதும்	एषः	இதோ
प्रसन्नसलिला	தெளிந்த ஜலமுற்றதும்	अगस्त्यस्य	அகஸ்தியரது
		आश्रमः हि	ஆச்ரமமும்
शिवा	பாவனமானதுமான	दृश्यते	காணப்படுகிறது;
गोदावरी	கோதாவரி நதி;	पश्य	பாராய்!

दीप्तश्चैवाश्रमो ह्येष सुतीक्ष्णस्य महात्मनः ॥ ४६ ॥

महात्मनः	"மகாத்மாவான	आश्रमः एव च	ஆச்ரமமும்
सुतीक्ष्णस्य	ஸுதீக்ஷ்ணரது	एषः हि	இதோதான் இருக்கிறது.
दीप्तः	ஜ்வலிக்கும்		

वैदेहि दृश्यते चात्र शरभङ्गाश्रमो महान् । उपयातः सहस्राक्षो यत्र शक्रः पुरन्दरः ॥

वैदेहि	"ஜானகி!	शक्रः	இந்திரர்
यत्र	எங்கு	उपयातः	எழுந்தருளினாரோ
सहस्राक्षः	ஆயிரம் கண்களுற்றவரும்	महान्	உத்தமமான [அந்த
		शरभङ्गाश्रमः	சரபங்காச்ரமம்
पुरन्दरः च	சத்ருநகரங்களையழிப்பவருமான	अत्र	இவ்விடத்தில்
		दृश्यते	காணப்படுகிறது.

अस्मिन्देशे महाकायो विराधो निहतो मया ॥ ४८ ॥

अस्मिन्	"இந்த	विराधः	விராதன்
देशे	இடத்தில்	मया	என்னால்
महाकायः	பெருடல்கொண்டவ-[னை	निहतः	கொல்லப்பட்டான்.

एते हि तापसावासा दृश्यन्ते तनुमध्यमे । अत्रिः कुलपतिर्यत्र सूर्यवैश्वानरप्रभः ॥
अत्र सीते त्वया दृष्टा तापसी धर्मचारिणी ॥ ४९ ॥

तनुमध्यमे	"நுண்ணிடையாய்!	तापसावासाः	முனிவர்களின் ஆச்ரமங்கள்
सीते	ஸீதே!		
एते	இதோ	दृश्यन्ते	காணப்படுகின்றன;

सूर्यवैश्वानरप्रभः	ஸூர்யனையும் அக்னியையும் நிகர்த்த ஒளிகொண்ட	अत्र हि	இவ்விடத்தில்தான்
		त्वया	உன்னால்
		धर्मचारिणी	தர்மிஷ்டையான
कुलपतिः	குலபதியான	तापसी	முனிவர் மனைவி (அனஸூயாதேவி)
अत्रिः	அத்ரிமுனிவர்		
यत्र	இருக்குமிடமான	दृष्टा	தரிசிக்கப்பட்டாள்.

असौ सुतनु शैलेन्द्रश्चित्रकूटः प्रकाशते । यत्र मां कैकयीपुत्रः प्रसादयितुमागतः ॥५०॥

सुतनु	"ஸுந்தரீ !	आगतः	வந்தானோ அந்த
यत्र	எங்கு	चित्रकूटः	சித்திரகூட
कैकयीपुत्रः	பரதன்	शैलेन्द्रः	பர்வதச்ரேஷ்டம்
मां	என்னை	असौ	இதோ
प्रसादयितुं	பிரார்த்திக்க	प्रकाशते	விளங்குகிறது.

एषा सा यमुना दूराद्दृश्यते चित्रकानना ॥ ५१ ॥

सा	"அந்த	यमुना	யமுனையானது
एषा	இந்த	दूरात्	தூரத்தில்
चित्रकानना	அழகியசோலைகளுற்ற	दृश्यते	காணப்படுகிறது.

भरद्वाजाश्रमो यत्र श्रीमानेष प्रकाशते ॥ ५२ ॥

यत्र	இந்த இடத்தில்	भरद्वाजाश्रमः	பரத்வாஜமுனிவரது ஆச்ரமம்
एषः	இதோ		
श्रीमान्	மகிமை மிக்க	प्रकाशते	விளங்குகிறது.

एषा त्रिपथगा गङ्गा दृश्यते वरवर्णिनि । नानाद्विजगणाकीर्णा संप्रपुष्पितकानना॥५३॥

वरवर्णिनि	"ஸுந்தரீ !	संप्रपुष्पित-कानना	நன்கு பூத்த சோலைகளுற்றதுமான
त्रिपथगा	முவ்வழியாய் செல்வதும்	गङ्गा	கங்காநதி
नानाद्विज-गणाकीर्णा	பல பறவைக் கூட்டங்கள் நிறைந்ததும்	एषा	இதோ
		दृश्यते	காணப்படுகிறது.

शृङ्गिबेरपुरं चैतद्गुहो यत्र समागतः ॥ ५४ ॥

गुहः	"குகன் [இடமான	शृङ्गिबेरपुरं	சிருங்கிபேரபுரம்
यत्र समागतः	நட்புக்கொண்ட	एतत् च	இதுதான்,

एषा सा दृश्यते सीते सरयूर्यूपमालिनी । नानातरुशताकीर्णा संप्रपुष्पितकानना ॥५५॥

सीते	'ஸீதே !	संप्रपुष्पित-कानना	நன்கு பூத்த சோலைகளுற்றதுமான
यूपमालिनी	யூபஸ்தம்பங்களின் வரிசைகளைக்கொண்டதும்	सा	அந்த
		सरयूः	ஸரயூநதி
नानातरु-शताकीर्णा	பல மரங்களின் கூட்டங்களால் நிறைந்ததும்	एषा	இதோ
		दृश्यते	காணப்படுகிறது.

एषा सा दृश्यतेऽयोध्या राजधानी पितुर्मम । अयोध्यां कुरु वैदेहि प्रणामं पुनरागता ॥

मम पितुः	"எனது தந்தையாரது	वैदेहि	ஜானகீ!
राजधानी	ராஜதானியாகிய	पुनः आगता	திரும்பிவந்துசேர்ந்தவளான நீ
सा	அந்த		
अयोध्या	அயோத்தியானது	अयोध्यां	அயோத்திக்கு
एषा	இதோ	प्रणामं	நமஸ்காரத்தை
दृश्यते	காணப்படுகிறது;	कुरु	செய்வாயாக"

ततस्ते वानराः सर्वे राक्षसश्च विभीषणः । उत्पत्योत्पत्य ददृशुस्तां पुरीं शुभदर्शनाम् ॥

ततः	அப்பொழுது	उत्पत्य उत्पत्य	எழுந்தெழுந்து
ते	அந்த	तां	அந்த
वानराः	வானரர்கள்	शुभदर्शनां	மங்களகரமான தோற்றங்கொண்ட
सर्वे	யாவரும்		
राक्षसः	அரக்கராகிய	पुरीं	நகரை
विभीषणः च	விபீஷணரும்	ददृशुः	பார்த்தார்கள்.

ततस्तु तां पाण्डुरहर्म्यमालिनीं विशालकक्ष्यां गजवाजिसङ्कुलाम् ॥
पुरीमयोध्यां ददृशुः प्लवङ्गमाः पुरीं महेन्द्रस्य यथाऽमरावतीम् ॥ ५८ ॥

ततः	அப்பொழுது	पाण्डुरहर्म्य-मालिनीं	வெளிறிய அரண்மனைகளின் வரிசைகள் கொண்டதாகவும்
प्लवङ्गमाः	வானரர்கள்		
महेन्द्रस्य	தேவேந்திரனது		
पुरीं	பட்டணமான	विशालकक्ष्यां	விசாலமான கட்டிடங்கள் கொண்டதாகவும்
अमरावतीं	அமராவதியை		
यथा	போன்ற	गजवाजि-संकुलां तु	யானைகளாலும் குதிரைகளாலும் நிறைந்ததாகவும்
तां	அந்த		
अयोध्यां	அயோத்யா		
पुरीं	பட்டணத்தை	ददृशुः	கண்டார்கள்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे षड्विंशत्युत्तरशततमः सर्गः ॥

आदितः श्लोकाः 20415 —— युद्धकाण्डे आदितः श्लोकाः 5740

सप्तविंशत्युत्तरशततमः सर्गः—நூற்றிருபத்தேழாவது ஸர்க்கம் ॥ १२७ ॥

भरद्वाजाश्रमप्राप्तिः—பரத்வாஜாச்ரமத்தையடைதல்

पूर्णे चतुर्दशे वर्षे पञ्चम्यां लक्ष्मणाग्रजः । भरद्वाजाश्रमं प्राप्य ववन्दे नियतो मुनिम् ॥१॥

लक्ष्मणाग्रजः	ஸ்ரீராமர்	भरद्वाजाश्रमं	பரத்வாஜாச்ரமத்தை
चतुर्दशे	பதினான்காவது	प्राप्य	அடைந்து
वर्षे	வருஷம்	नियतः	பக்திமிகுந்தவராய்
पूर्णे	நிறைய	मुनिं	முனிவரை
पञ्चम्यां	பஞ்சமி திதியில்	ववन्दे	நமஸ்கரித்தார்.

सोऽपृच्छदभिवाद्यैनं भरद्वाजं तपोधनम् ॥ २ ॥

सः	அவர் (ஸ்ரீராமர்)	भरद्वाजं	பரத்வாஜமுனிவரை
एनं	அந்த	अभिवाद्य	நமஸ்கரித்து
तपोधनं	தவத்தையே செல்வமாய்க்கொண்ட	अपृच्छत्	பின்வருமாறு வினவினார்:

शृणोषि कच्चिद्भगवन्सुभिक्षानामयं पुरे । कच्चिच्च युक्तो भरतो जीवन्त्यपि च मातरः ॥

भगवन्	"பகவானே!	मातरः	தாய்மார்கள்
पुरे	நகரில்	जीवन्ति अपि	ஸுகமாய் வாழ்ந்து வருகின்றார்களா?
सुभिक्षानामयं कच्चित्	செழுமையும் ஆரோக்யமும் இருக்கிறதா?	च	ஆகிய இதை
भरतः	பரதன்	शृणोषि कच्चित्	தேவரீர் அறிகின்றீர்களா?"
युक्तः च	அசையா அன்புடனிருக்கின்றானா?		

एवमुक्तस्तु रामेण भरद्वाजो महामुनिः । प्रत्युवाच रघुश्रेष्ठं स्मितपूर्वं प्रहृष्टवत् ॥ ४ ॥

रामेण	ஸ்ரீராமரால்	प्रहृष्टवत्	உவகையுடன்
एवं	மேற்கண்டவாறு	स्मितपूर्वं	புன்னகையோடு
उक्तः	வினவப்பட்ட	रघुश्रेष्ठं	ரகுகுலதிலகரைப் பார்த்து
भरद्वाजः	பரத்வாஜ	प्रत्युवाच	பின்வருமாறு மொழிந்தருளினார்:
महामुनिः	மகரிஷியும்		
तु	அப்பொழுது		

पङ्कदिग्धस्तु भरतो जटिलस्त्वां प्रतीक्षते । पादुके ते पुरस्कृत्य सर्वं च कुशलं गृहे ॥५॥

भरतः	"பரதன்	त्वां तु	உன்னையே
पङ्कदिग्धः	அழுக்குப் படிந்து	प्रतीक्षते	எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்;
जटिलः	ஜடாதாரியாய்		
ते	உனது	गृहे	அரண்மனையில்
पादुके	இரு பாதுகைகளை	सर्वं च	யாவும்
पुरस्कृत्य	முன் வைத்துக் கொண்டு	कुशलम्	க்ஷேமமே.

त्वां पुरा चीरवसनं प्रविशन्तं महावनम् । स्त्रीतृतीयं च्युतं राज्याद्धर्मकामं च केवलम् ॥
पदातिं त्यक्तसर्वस्वं पितुर्वचनकारिणम् । सर्वभोगैः परित्यक्त स्वर्गच्युतमिवामरम् ॥७॥
दृष्ट्वा तु करुणा पूर्वं ममासीत्समितिञ्जय । कैकेयीवचने युक्तं वन्यमूलफलाशिनम् ॥८॥

समितिञ्जय	“போரில் வெற்றி [சூடியவனே!
पुरा	முன்பு
त्वां	உன்னை
चीरवसनं	மரவுரியுடுத்தவனாய்
स्त्रीतृतीयं	மனைவியை மூன்றாவதாகக்கொண்டு செல்பவனாய்
राज्यात्	ராஜ்யத்தினின்று
च्युतं	அகன்றவனாய்
केवलं	தனித்து
धर्मकामं च	தர்மத்தையே ஸர்வமுமாய்க்கொண்டவனாய்
पदातिं	பாதசாரியாய்
त्यक्तसर्वस्वं	பொருள்கள் யாவையும் (தள்ளிவைத்து)
पितुः	தந்தையாரது
वचनकारिणं	ஆஜ்ஞைப்படி நடப்பவனாய்
स्वर्गच्युतं	ஸ்வர்க்கத்தினின்று நழுவிய
अमरं इव	தேவன்போல்
सर्वभोगैः	எல்லா போகங்களாலும்
परित्यक्तं	நீங்கப்பெற்றவனாய்
कैकेयीवचने	கைகேயியின் கட்டளை
युक्तं	[யில் அசையாபக்திகொண்டவனாய்
वन्यमूल-फलाशिनं तु	காட்டிலுண்டாகும் கிழங்குகனிகளைப் புசிப்பவனாய்
महावनं	பெருங்காட்டில்
प्रविशन्तं	புகுபவனாக
दृष्ट्वा	கண்டு
मम	எனக்கு
पूर्वं	முதலில்
करुणा	துக்கம்
आसीत्	உண்டாயிற்று.

सांप्रतं सुसमृद्धार्थं समित्रगणबान्धवम् । समीक्ष्य विजितारिं त्वां मम प्रीतिरनुत्तमा ॥९॥

सांप्रतं	“இப்பொழுது
विजितारिं	சத்ருக்களை ஜெயித்து
सुसमृद्धार्थं	மேற்கொண்ட கருமம் நிறைவேற்றி
समित्रगण-बान्धवं	நண்பர்களோடும் சுற்றத்தார்களோடும் கூடியவனாய்
त्वां	உன்னை
समीक्ष्य	பார்த்து
मम	எனக்கு
अनुत्तमा	அளவிலாத
प्रीतिः	ஆனந்தம் உண்டாகிறது.

सर्वं च सुखदुःखं ते विदितं मम राघव ॥ १० ॥

राघव	“ஸ்ரீராம!
ते	உனது
सुखदुःखं	ஸுகம் துக்கம்
सर्वं च	யாவும்
मम	என்னால்
विदितम्	அறியப்பட்டது.

यत्त्वया विपुलं प्राप्तं जनस्थानवधादिकम् । ब्राह्मणार्थे नियुक्तस्य रक्षितुः सर्वतापसान् ॥
रावणेन हृता भार्या बभूवेयमनिन्दिता । मारीचदर्शनं चैव सीतोन्मथनमेव च ॥ १२ ॥
कबन्धदर्शनं चैव पम्पाभिगमनं तथा । सुग्रीवेण च ते सख्यं यच्च वाली हतस्त्वया ॥
मार्गणं चैव वैदेह्याः कर्म वातात्मजस्य च । विदितायां च वैदेह्यां नलसेतुर्यथा कृतः ॥
यथा वा दीपिता लङ्का प्रहृष्टैर्हरियूथपैः । सपुत्रबान्धवामात्यः सबलः सहवाहनः ॥१५॥
यथा विनिहतः संख्ये रावणो देवकण्टकः । समागमश्च त्रिदशैर्यथा दत्तश्च ते वरः॥१६॥
सर्वं ममैतद्विदितं तपसा धर्मवत्सल । संपतन्ति च मे शिष्याः प्रवृत्त्याख्याः पुरीमितः॥१७॥

धर्मवत्सल	"தர்மத்தில் வழுவாப் பற்றுடையவனே !
त्वया	உன்னால்
विपुलं	பெரிய
जनस्थान-वधादिकं	ஜனஸ்தானத்தில் வதை முதலியன
प्राप्तं	நடத்தப்பட்டதே
यत्	அதுவும்,
ब्राह्मणार्थे	பிராம்மணர்களுக்காக
नियुक्तस्य	அசையா பக்தி கொண்டு
सर्वतापसान्	எல்லாமுனிவர்களையும்
रक्षितुः	பாதுக்காக்கும் உனது
इयं	இந்த
अनिन्दिता	நிர்தோஷையான
भार्या	தர்மபத்னி
रावणेन	ராவணனால்
हृता बभूव	திருடிக்கொண்டுபோகப்பட்டாள் என்பதும்,
मारीचदर्शनं एव च	மாரீசனைக்கண்டதும்,
सीतोन्मथनं एव च	ஸீதாவிஷயமாய் உண்டான பெரும் துக்கமும்,
कबन्धदर्शनं च एव	கபந்தனைக்கண்டதும்,
पम्पाभिगमनं तथा	பம்பாஸரஸிற்குச் சென்றதும்,
ते	உனக்கு
सुग्रीवेण	ஸுக்ரீவனோடு
सख्यं च	நட்பு ஏற்பட்டதும்,
त्वया	உன்னால்
वाली	வாலி
हतः यत् च	கொல்லப்பட்டதும்,
वैदेह्याः	ஸீதையை
मार्गणं च एव	தேடினதும்,
वातात्मजस्य	மாருதியினது
कर्म च	செயலும்,
वैदेह्यां	ஜானகி இருக்குமிடம்
विदितायां च	தெரிந்தவுடன்
नलसेतुः	நளனால் அணை
यथा कृतः	கட்டப்பட்டதே அதுவும்,
प्रहृष्टैः	உத்ஸாஹங்கொண்ட
हरियूथपैः	வானரஸேனைத்தலைவர்களால்
लङ्का	இலங்கையானது
यथा वा	எப்படி
दीपिता	கொளுத்தப்பட்டதோ அதுவும்,
देवकण्टकः	தேவசத்ருவான
रावणः	ராவணன்
सङ्ख्ये	போரில்
सपुत्र-बान्धवामात्यः	புத்திரர்கள் பந்துக்கள் மந்திரிகளோடும்
सबलः	சேனைகளுடனும்
सहवाहनः	வாஹனங்களுடனும்

यथा	எப்படி
विनिहतः	கொல்லப்பட்டானே அதுவும்,
त्रिदशैः	தேவர்களோடு
समागमः च	கூடியதும்,
ते यथा	உனக்கு எப்படி
वरः	வரம்
दत्तः च	கொடுக்கப்பட்டதோ அதுவும் ஆகிய
एतत् सर्वं	இவை யாவும்
तपसा	தவத்தால்
मम	என்னால்
विदितं	அறியப்பட்டது;
मे	எனக்கு
प्रवृत्त्याख्याः	செய்தியைச்சொல்லும்
शिष्याः च	சிஷ்யர்களும்
इतः	இங்கிருந்து
पुरीं	நகருக்கு
संपतन्ति	சென்றுவருகின்றார்கள்.

अहमप्यत्र ते दद्मि वरं शस्त्रभृतां वर ॥ १८ ॥

शस्त्रभृतां वर	"வீரர்களுள் உத்தம!
अद्य	இப்பொழுது
अहं अपि	நானும்
ते	உனக்கு
वरं	ஒருவரம்
दद्मि	அளிக்கின்றேன்.

अर्घ्यमद्य गृहाणेदमयोध्यां श्वो गमिष्यसि ॥ १९ ॥

अद्य	"இன்று
इदं अर्घ्यं	இந்தப் பூஜையை
गृहाण	ஏற்றுக்கொள்;
श्वः	நாளையதினம்
अयोध्यां	அயோத்திக்கு
गमिष्यसि	செல்வாய்."

तस्य तच्छिरसा वाक्यं प्रतिगृह्य नृपात्मजः । बाढमित्येव संहृष्टो धीमान्वरमयाचत॥२०॥

नृपात्मजः	சக்ரவர்த்தி திருமகனும் (ஸ்ரீராமரும்)
संहृष्टः	ஆனந்தங்கொண்டு
तस्य	அவரது
तत्	அந்த
वाक्यं	கட்டளையை
शिरसा	சிரஸால்
प्रतिगृह्य	வகித்து
बाढं एव	'அப்படியே ஆகட்டும்,
इति	என்று சொல்லி
धीमान्	பேரறிவாளரான
वरं	வரத்தை [அவர்
अयाचत	பின்வருமாறு வேண்டினார்;

अकाले फलिनो वृक्षाः सर्वे चापि मधुस्रवाः । फलान्यमृतकल्पानि बहूनि विविधानि च॥
भवन्तु मार्गे भगवन्नयोध्यां प्रतिगच्छतः ॥ २१ ॥

भगवन्	"பகவானே!
अयोध्यां	அயோத்திக்கு
प्रतिगच्छतः	திரும்பிச்செல்லும்
मार्गे	வழியில் [எனது
वृक्षाः	மரங்கள்
सर्वे च	எல்லாமும்
अकाले अपि	காலமல்லாத காலத்திலும்
फलिनः	பழங்கள் செறிந்தனவும்
मधुस्रवाः	தேனை பெருக்குவனவுமானவைகளாய்
विविधानि	பலவகை
बहूनि	கணக்கற்ற
अमृतकल्पानि	அமிருதத்திற்கொப் [பான
फलानि च	பழங்களுடன்
भवन्तु	இருக்கவேண்டும்."

तथेति च प्रतिज्ञाते वचनात्समनन्तरम् । अभवन्पादपास्तत्र स्वर्गपादपसन्निभाः ॥ २२ ॥

वचनात्	வேண்டுகோளுக்கு
समनन्तरं च	மறுகணமே
तथा	"அவ்வண்ணமே
इति	என்று [யாகட்டும்"
प्रतिज्ञाते	வாக்களிக்கப்பட்ட வளவில்,
तत्र	அங்கு
पादपाः	விருக்ஷங்கள்
स्वर्गपादप- सन्निभाः	ஸ்வர்க்கத்தில் இருக்கும் விருக்ஷங்களை நிகர்த்தனவாய்
अभवन्	ஆயின.

निष्फलाः फलिनश्चासन्विपुष्पाः पुष्पशालिनः । शुष्काः समग्रपत्रास्ते नगाश्चैव मधुस्रवाः ॥
सर्वतो योजनात्रीणि गच्छतामभवंस्तदा ॥ २३ ॥

तदा	அப்பொழுது
सर्वतः	எங்கும்
योजनात्रीणि	மூன்றுயோஜனைதூரம்
गच्छतां	செல்லுமவர்களுக்கு
निष्फलाः	கனியற்ற
नगाः च	விருக்ஷங்களும்
फलिनः	பழங்கள் செறிந்தனவாக
आसन्	இருந்தன;
विपुष्पाः	புஷ்பமற்ற
ते	அவைகள்
पुष्पशालिनः च	புஷ்பங்கள்கொண்டனவாகவும்,
शुष्काः	காய்ந்தவைகள்
समग्रपत्राः च	இலைகள் நிறைந்தனவாயும்
मधुस्रवाः एव	தேனைப்பெருக்குகின்றனவாயும்
अभवन्	இருந்தன.

ततः प्रहृष्टाः प्लवगर्षभास्ते बहूनि दिव्यानि फलानि चैव ।
कामादुपाश्नन्ति सहस्रशस्ते मुदाऽन्विताः स्वर्गजितो यथैव ॥ २४ ॥

ततः	அப்பொழுது
ते	அந்த
प्लवगर्षभाः एव	வானரர்களும்
प्रहृष्टाः	ஆனந்தங்கொண்ட [வர்களாய்
बहूनि	பல
दिव्यानि	சிறந்த
फलानि च	பழங்களையும்
सहस्रशः	ஆயிரக்கணக்காக
कामात्	இஷ்டப்படி
उपाश्नन्ति	புசித்தார்கள்;
स्वर्गजितः	ஸ்வர்க்கத்தையடைந்தவர்கள்
यथा एव	எவ்வாறோஅவ்வாறே
ते	அவர்கள்(வானரர்கள்)
मुदा अन्विताः	ஆனந்தத்துடன் விளங்கினார்கள்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे सप्तविंशत्युत्तरशततमः सर्गः ॥

आदितः श्लोकाः 20439 युद्धकाण्डे आदितः श्लोकाः 5764

भरतं प्रति हनुमत्प्रेषणम् — பரதரிடம் ஹனுமாரையனுப்புதல்

अयोध्यां तु समालोक्य चिन्तयामास राघवः । प्रियकामः प्रियं रामस्ततस्त्वरितविक्रमः ॥

त्वरितविक्रमः	துரிதமான பராக்கிரமம் கொண்டவரும்	रामः	ஸ்ரீராமர்
प्रियकामः	பிரியத்தை ஸதா விரும்புபவரும்	ततः	அப்பொழுது
राघवः	ரகுகுலதிலகருமாகிய	अयोध्यां	அயோத்தியையை
		समालोक्य	நினைத்து
		प्रियं तु	க்ஷேமத்தைப்பற்றி
		चिन्तयामास	சிந்தித்தார்.

चिन्तयित्वा ततो दृष्टिं वानरेषु न्यपातयत् ॥ २ ॥

ततः	அப்பொழுது	वानरेषु	வானரர்களிடம்
चिन्तयित्वा	ஆலோசித்துவிட்டு	दृष्टिं	பார்வையை
		न्यपातयत्	செலுத்தினர்.

उवाच धीमांस्तेजस्वी हनूमन्तं प्लवङ्गमम् । अयोध्यां त्वरितो गत्वा शीघ्रं प्लवगसत्तम ॥
जानीहि कच्चित्कुशली जनो नृपतिमन्दिरे ॥ ३ ॥

धीमान्	பேரறிவாளரும்	शीघ्रं	சீக்கிரம்
तेजस्वी	தேஜஸ்வியுமாகுமவர்	अयोध्यां	அயோத்திக்கு
प्लवङ्गमं	வானரரான	गत्वा	சென்று
हनूमन्तं	ஹனுமாரைப்பார்த்து	नृपतिमन्दिरे	அரசர் மாளிகையில்
उवाच	பின்வருமாறு ஆஜ்ஞாபித்தார்:	जनः	யாவரும்
प्लवगसत्तम	"வானரோத்தம!	कुशली कच्चित्	க்ஷேமமா என்று
त्वरितः	வேகமுற்றவனாய்	जानीहि	அறிந்துவருவாயாக.

शृङ्गिबेरपुरं प्राप्य गुहं गहनगोचरम् । निषादाधिपतिं ब्रूहि कुशलं वचनान्मम ॥ ४ ॥

शृङ्गिबेरपुरं	"சிருங்கிபேர நகருக்கு	गुहं	குஹனிடம்
प्राप्य	சென்று	मम	எனது
गहनगोचरं	வனவாஸியும்	वचनात्	சொற்படி
निषादाधिपतिं	வேடுவத்தலைவனுமான	कुशलं	க்ஷேமத்தை
		ब्रूहि	வினவுவாயாக.

श्रुत्वा तु मां कुशलिनमरोगं विगतज्वरम् । भविष्यति गुहः प्रीतः स ममात्मसमः सखा ॥

गुहः	"குஹன்	प्रीतः	ஆனந்தங்கொண்டவனாய்
मां	என்னை	भविष्यति	ஆவான்;
कुशलिनं	க்ஷேமமாயும்	सः	அவன்
अरोगं	ரோகமற்றவனாகவும்	मम	எனக்கு
विगतज्वरं	மனக்கவலையில்லாதவனாகவும்	आत्मसमः	உயிருக்குச்சமமான
श्रुत्वा तु	கேட்டவுடன்	सखा	தோழன்.

अयोध्यायाश्च ते मार्गं प्रवृत्तिं भरतस्य च । निवेदयिष्यति प्रीतो निषादाधिपतिर्गुहः ॥

प्रीतः	"ஆனந்தங் கொண்ட
निषादाधिपतिः	வேடுவத்தலைவனை
गुहः	குஹன்
ते	உனக்கு
अयोध्यायाः	அயோத்தியின்
मार्गं च	மார்க்கத்தையும்
भरतस्य	பரதனது
प्रवृत्तिं च	விருத்தாந்தத்தையும்
निवेदयिष्यति	தெரிவிப்பான்.

भरतस्तु त्वया वाच्यः कुशलं वचनान्मम । सिद्धार्थं शंस मां तस्मै सभार्यं सहलक्ष्मणम् ॥

मम	"எனது
वचनात्	சொல்லாக
त्वया	உன்னால்
भरतः	பரதன்
कुशलं	க்ஷேமத்தை
वाच्यः	வினவப்படவேண்டியவன்;
सभार्यं	பத்னியோடுகூடவும்
सहलक्ष्मणं तु	லக்ஷ்மணனோடு கூடவும்
मां	என்னை
सिद्धार्थं	மேற்கொண்ட கருமம் நிறைவேறப்பெற்றவனாக
तस्मै	அவனிடம்
शंस	தெரிவிப்பாயாக.

हरणं चापि वैदेह्या रावणेन बलीयसा । सुग्रीवेण च संसर्गं वालिनश्च वधं रणे ॥ ८ ॥
मैथिल्यन्वेषणं चैव यथा चाधिगता त्वया । लङ्घयित्वा महातोयमापगापतिमव्ययम् ॥९॥
उपयानं समुद्रस्य सागरस्य च दर्शनम् । यथा च कारितः सेतू रावणश्च यथा हतः ॥
वरदानं महेन्द्रेण ब्रह्मणा वरुणेन च । महादेवप्रसादाच्च पित्रा मम समागमम् ॥ ११ ॥
उपयातं च मां सौम्य भरताय निवेदय । सह राक्षसराजेन हरीणामीश्वरेण च ॥ १२ ॥

सौम्य	"புண்யாத்மாவே!
बलीयसा	பலசாலியாகின
रावणेन	ராவணனால்
वैदेह्याः	ஸீதாதேவியின்
हरणं अपि च	ஹரணத்தையும்
सुग्रीवेण	ஸுக்ரீவனுடன்
संसर्गं च	நட்பையும்
रणे	போரில்
वालिनः	வாலியின்
वधं च	வதையையும்
मैथिल्यन्वेषणं च एव	ஸீதையைத் தேடியதையும்
महातोयं	விரிநீருற்ற
अव्ययं	குறைவற்ற
आपगापतिं	ஸமுத்திரத்தை
लङ्घयित्वा	தாண்டி
त्वया	உன்னால்
यथा	எப்படி
अधिगता च	(ஸீதை) பார்க்கப்பட்டாளோ அதையும்
समुद्रस्य	சமுத்திரத்தை
उपयानं	கிட்டியதையும்
सागरस्य	சமுத்திரராஜனது
दर्शनं च	தர்சனத்தையும்
यथा	எப்படி
सेतुः	அணை
कारितः च	கட்டப்பட்டதோ அதையும்
रावणः	ராவணன்
यथा	எவ்விதம்

हतः च	கொல்லப்பட்டானே அதையும்	पित्रा	தந்தையாரோடு
महेन्द्रेण	தேவேந்திரராலும்	समागमं च	ஸமாகமத்தையும்
ब्रह्मणा	பிரம்மதேவராலும்	राक्षसराजेन	ராக்ஷஸமன்னனேடும்
वरुणेन	வருணதேவராலும்	हरीणां ईश्वरेण	வானரர்களின் மன்னரோடும்
वरदानं च	வரதானத்தையும்	सह	கூட
महादेवप्रसादात्	சிவபெருமானது அனுக்ரகத்தால்	उपयान्तं	வந்திருப்பவனாய்
मम	எனக்கு	मां च	என்னையும்
		भरताय	பரதனுக்கு
		निवेदय	தெரிவிப்பாயாக.

जित्वा शत्रुगणान्रामः प्राप्य चानुत्तमं यशः । उपयाति समृद्धार्थः सह मित्रैर्महाबलैः ॥
एतच्छ्रुत्वा यमाकारं भजते भरतस्तदा । स च ते वेदितव्यः स्यात्सर्वं यच्चापि मां प्रति ॥

रामः	"ஸ்ரீராமர்	तदा	அப்பொழுது
शत्रुगणान्	சத்ருவர்க்கங்களை	भरतः	பரதன்
जित्वा	வென்று	यं	எந்த
अनुत्तमं	ஒப்பற்ற	आकारं	முகக்குறியை
यशः	புகழை	भजते	கொள்கின்றானே
प्राप्य च	அடைந்து	सः च	அதுவும்
समृद्धार्थः	மனோரதம் நிறைவேறப்பெற்றவராய்	ते	உன்னால்
महाबलैः	மகாபலசாலிகளான	वेदितव्यः स्यात्	கவனிக்கத்தக்கதாகும்;
मित्रैः सह	நண்பர்களுடன் கூட	मां प्रति	என்னைப்பற்றி
उपयाति	வருகின்றார் என்ற	यत्	எதுவோ அது
एतत् श्रुत्वा	இதைக்கேட்டு,	सर्वं अपि	எல்லாமும் அப்படியே
		च	கவனிக்கத்தக்கது.

ज्ञेयाश्च सर्वे वृत्तान्ता भरतस्येङ्गितानि च । तत्त्वेन मुखवर्णेन दृष्ट्या व्याभाषणेन च ॥

भरतस्य	"பரதனது	व्याभाषणेन च	பேச்சாலும்
वृत्तान्ताः सर्वे च	செய்திகள் யாவும்	इङ्गितानि	உள்ளக்கருத்துக்கள்
ज्ञेयाः	அறியத்தக்கன;	तत्त्वेन	உள்ளபடி
मुखवर्णेन	முகவொளியாலும்	च	அங்ஙனமே அறியத் தக்கன.
दृष्ट्या	பார்வையாலும்		

सर्वकामसमृद्धं हि हस्त्यश्वरथसंकुलम् । पितृपैतामहं राज्यं कस्य नावर्तयेन्मनः ॥ १६ ॥

सर्वकामसमृद्धं	"எல்லா மனோரதத்தையும் பூர்த்திசெய்துவைப்பதும்	पितृपैतामहं	தகப்பன் பாட்டன் முறையாய் வந்ததுமான
